

தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் "வேர்களைத் தேடி திட்டத்தின் நிறைவு விழாவில், 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்கள் இடையே தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி சிறப்புரையாற்றினார் உடன் பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர் சஜ்ஜன் சிங் ராசவான், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார்மற்றும் அயலகத் தமிழர் நல வாரிய உறுப்பினர்கள் துபாய் மீரான், பைசல், புகழ் காந்தி, ராஜரத்தினம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகர் மார்க்கெட் அருகில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம்எம்.எல்.ஏ. கலந்து கொண்டு திருநங்கைகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய நிர்வாகிகள் ஏ.காசீம் முஹம்மது, சே.அரசு, ப.சேகர், பொன் கோதண்டன், நா.பரசுராமன், வி.ஞானம், துளசிராஜேந்திரன், இரத்தனமாலா, சரஸ்வதிசெல்வம், ராதிகா, பூபாலன், எம்.ஜி.கார்த்திக், ப.சு.க.இளங்கோவன், மு.கீதாராமன், கே.வி.தியாகராஜன், எஸ்.ஞானப்பன், ஆட்டோகர்ணா, எஸ்.நாகராஜ் எம். முகம்மது அலி, ஆர்.சி.சிவசங்கர். க.பிரபு. கே.கண்ணன், வீ.வெங்கடேசன், ஆர்.குமரன், ஏ.சந்திரன், எம்.முத்தையா, எம்.ஹயாத்பீ, ஆர்.வாணிரகுபதி, ஆர்.ஜெயா, ஆர்.புவனேஸ்வரி, தி.மாரியம்மாள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ்

# பெரம்பலூர் மாவட்டத்தில் 15,764 பயனாளிகள் பயன் பெறவுள்ளனர்!

## போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

பெரம்பலூர், ஆக.16-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை" சென்னை, தண்டையார் பேட்டை, கோபால் நகரில் தொடங்கி வைத்தார்.



அதனைத்தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ் தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில், பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட துறைமங்கலம் ஒளவையார் தெரு, வெங்கடேசபுரம் மற்றும் வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட தேவையூர் ஆகிய பகுதிகளில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கே நேரில் சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை வழங்கினார்.

போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் வயது முதிர்ந்தவர்களிடம் குடிமைப் பொருட்களை வழங்கி கூறுகையில், முதலமைச்சர் அவர்கள் உங்களைப் போன்ற வயது முதிர்ந்தோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் சிரமத்தை உணர்ந்து, அவர்களின் வீடு தேடி சென்று பொது விநியோகத்திட்டத்தின் மூலமாக அத்தியாவசிய உணவு பொருட்களை வழங்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். எனவேதான் உங்களுக்கு இந்த குடிமைப் பொருட்கள் வீடு தேடி வந்து வழங்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். என தெரிவித்தார்.

பொருட்களைப் பெற்றுக் கொண்ட திருமதி செல்லம்மாள் கூறுகையில், என்னுடைய கணவர் இறந்து பல ஆண்டுகளாகின்றது. குழந்தைகளும் இல்லை. யாருடைய உதவியும் இல்லாமல் தனியாக வசித்து வருகிறேன். வயது முதிர்வின் காரணமாக ரேசன் கடைக்கு நடந்துசென்றுகூட பொருள்வாங்க இயலான நிலையில், மிகவும் சிரமப்பட்டு வந்த எனக்கு முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் என்னுடைய வீட்டிற்கே குடிமைப் பொருட்களை அமைச்சரே வந்து வழங்கியது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. என்னைப் போன்ற ஆதரவற்றோர்களுக்கு ஆதரவளிக்கும் திட்டமாக இத்திட்டம் உள்ளது. எனக்கு மகன், மகள் இல்லாத குறையை நீக்கி மகனாக என் வீட்டிற்கே அரிசி, பருப்பு பொருட்களை வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுவதாக தெரிவித்தார்.

பின்னர் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள், வயது முதிர்ந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவு பொருட்கள் பெறுவதில் சிரமமாக இருப்பதை உணர்ந்து, அவர்களது இல்லம் தேடி உணவுப்பொருட்கள் வழங்கும் வகையில் தாயுமானவர் என்ற திட்டத்தினை சென்னை இன்று தொடங்கி வைத்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தை தொடங்கிவைக்கும் வகையில், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட துறைமங்கலம், வெங்கடேசபுரம் மற்றும் வேப்பந்தட்டை வட்டத்திற்குட்பட்ட தேவையூர் ஆகிய பகுதிகளில், 70 வயது கடந்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இது ஒரு புரட்சிகரமான திட்டம். மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் உணவுப் பொருட்கள் அவர்களது வீட்டிற்கே சென்று வழங்கப்படும் என்பது திட்டத்தினுடைய சிறப்பாகும். எனவே வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள் இனிவரும் காலங்களில் எவ்வித சிரமமும் இன்றி பொது விநியோகத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். பெரம்பலூர் மாவட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 15,764 வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தினை முதன் முதலாக செயல்படுத்தினார்கள். விவசாயிகளுக்கு என்ன தேவை என்பதை அறிந்து அதனை செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு தயார் நிலையில் உள்ளது. சூழ்நிலைக் கேற்றவாறு விவசாயிகளுக்கு தடை இல்லாமல் மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு உண்டான நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், போக்குவரத்து துறையில் காலியாக உள்ள 3,200 பணியிடங்களை நிரப்பும் வகையில் எழுத்து தேர்வு முடிவு பெற்றுள்ளது. மதிப்பெண் அடிப்படையில் அவர்கள் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு, 3,200 பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என தெரிவித்தார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் க. பாண்டியன், துணை பதிவாளர்கள் .பா.சிவக்குமார் (பொ.வி.தி), மாவட்ட வழங்கல் அலுவலர் சக்திவேல், நகர்மன்றத் தலைவர் அம்பிகா ராஜேந்திரன், நகர்மன்றத் துணைத் தலைவர் து.ஆதவன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ராஜ்குமார், பா.துரைசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் செ.நல்லதம்பி, தி. மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந. ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், பெரம்பலூர் வட்டாட்சியர் பாலசுப்பிரமணியன், பெரம்பலூர் 9வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி ஜெயப்பிரியா மணிவாசகம் மற்றும் அரசு அலுவலர்கள் மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் சுதந்திர தின விழா:

# மாணவ, மாணவியர்களின் கண்கவரும் கலை நிகழ்ச்சி!

## மேயர் ஆர்.பிரியா தேசியக் கொடி ஏற்றி மரியாதை செலுத்தினார்!

சென்னை,ஆக.16-

பெருநகர சென்னை மாநகராட்சியில் நேற்று (15.08.2025) இந்திய சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். இதனைத் தொட ர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.

தொடர்ந்து, மேயர் அவர்கள் தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியர் மற்றும் பேண்டு, வாத்தியக்குழுவின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் புழல்-சென்னை நடுநிலைப் பள்ளி, சஞ்சீவிராயன் தெரு-சென்னை நடுநிலைப்பள்ளி, கோயம்பேடு-சென்னை மேல்நிலைப்பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்களின் கண்கவரும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு மிக அதிகமாக சொத்துவரி செலுத்திய 3 நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும், வட்டாரங்கள் அளவில் உரிய காலங்களில் முறையாக தாமதமில்லாமல் சொத்துவரி செலுத்திய 3 சொத்து உரிமையாளர்களுக்கும் பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) மேயர் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.

தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய 171 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கிப் பாராட்டினார்.

மேலும், தேசிய மாணவர் படை, சாரண சாரணியர்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அனைத்து மாணவ, மாணவியருக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், இணை ஆணையாளர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், துணை ஆணையாளர்கள் ம.பிரதிவிராஜ், (வருவாய் (ம) நிதி), வட்டார துணை ஆணையாளர்கள் எச்.ஆர்.கௌஷிக், (மத்தியம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு), அஃதாப் ரசூல், (தெற்கு), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக் குழுத் தலைவர்கள் க.தனசேகரன் (கணக்கு), த. விசுவநாதன் (கல்வி), த. இளைய அருணா (நகரமைப்பு), உதவி ஆணையாளர் (பொது நிர்வாகம்) செல்வி உமா மகேஸ்வரி, மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



இந்திய சுதந்திரத் திருநாளை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (15.08.2025) தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். உடன் மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன் உள்ளார்.

### ஜி.பசுபதி ஏற்பாட்டில் எம்.தில்லை குமார் பங்கேற்பு!

# எழும்பூர் வடக்கு பகுதியில் கலைஞர் நினைவு நாள் அறுசுவை உணவு!

## சொ.வேலு எம்.சி, ப.நீ.யாழினி வழங்கினர் !

சென்னை ஆக:16

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாவது நினைவு நாளை முன்னிட்டு,எழும்பூர் வடக்கு பகுதியில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது

சென்னை கிழக்கு மாவட்டம்,எழும்பூர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தலைவரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி 300 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் பெருநகர வளர்ச்சி குழும தலைவர் பி.கே. சேகர்பாபு அவர்களின் ஆலோசனைப்படி எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சென்னை மாநகராட்சி நியமன குழு உறுப்பினர் சொ.வேலு மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மகளிர் அணி மாநில சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் ப.நீ. யாழினி ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அறுசுவை உணவு வழங்கினர்.

நிகழ்ச்சி ஏற்பாட்டினை வர்த்தக அணி சார்பில் பகுதி அமைப்பாளர் ஜி.பசுபதி செய்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் வட்ட கழக செயலாளர் வி.அபாய், பகுதி அவை தலைவர் எம்.தில்லைகுமார் LIC.டி.கர்ணா, டி. கே..விஜயராஜ், ஆர்.குமரவேல், பன்னீர்செல்வம்,ஏ. ஜெபா, எம்.இளவரசன், எஸ். பாஸ்கர், அன்பரசு, எஸ்.குமரவேல், பிரவின்குமார் உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் பங்கேற்றனர்.



சுதந்திர திருநாளை முன்னிட்டு மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயிலில் சமபந்தி விருந்தில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பொது மக்களோடு அமர்ந்து உணவருந்தி அவர்களுக்கு நல உதவிகளை வழங்கினார். உடன் பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி, வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி விமலா கிருஷ்ணமூர்த்தி, திருமதி. கீதா முரளி, திருமதி.அ.ரேவதி, எம்.பி.மருதமுத்து, சி.டி.ஆறுமுகம், என்.வி.லோகநாதன், சி.எஸ்.நந்தகுமார், மு.சரவணன், பிரஸ் கே.ரவி எம்.ஜி.கர்ணன், டி.என்.ஆதி, எஸ்.மணிகண்டன், 124 அ வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

